# ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL
# தமிழ் மாநிலம்

**தேதி:- 11.10.2017**

அன்பார்ந்த தோழர்களே,

தமிழ் மாநில ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL கூட்டம் 11.10.2017 அன்று சென்னை க்ரீம்ஸ் சாலையில் உள்ள BSNL ஊழியர் சங்க அலுவலகத்தில் AIBSNLEA மாநில செயலாளர் தோழர் C.துரையரசன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் BSNLEU, NFTE, SNEA, AIBSNLEA, SEWA BSNL, NFTE STR ஆகிய சங்கங்களின் மாநில செயலாளர்கள் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர். 04.10.2017 அன்று டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL கூட்டத்தில் எடுக்கப்பட்ட கீழ்கண்ட முடிவுகளை கறாராக அமலாக்குவது என முடிவு செய்யப்பட்டது.

***கோரிக்கைகள்***

- 01.01.2017 முதல் நடைபெற வேண்டிய ஊதிய மாற்றத்தை அமல்படுத்துக!- 2வது ஊதிய மாற்றக் குழுவில் விடுபட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண்க!
- BSNLஐ நலிவடையச் செய்யும் துணைடவர் நிறுவனத்தை உருவாக்காதே!

***இயக்கங்கள்***

- 16.10.2017 - மாவட்ட, மாநில, அகில இந்திய தலைநகர்களில் ஆர்ப்பாட்டம்.
- 15.11.2017க்கு முன் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மனு கொடுப்பது.
- 16.11.2017- மாவட்ட, மாநில, அகில இந்திய தலைநகர்களில் மனித சங்கிலி.
- 12 &13.12.2017 அன்று இரண்டு நாட்கள் நாடு தழுவிய வேலை நிறுத்தம்.
- பிரச்சனைகள் தீரவில்லை எனில் காலவரையற்ற வேலை நிறுத்தம்.

தமிழ் மாநிலத்தில் இதனை அமல்படுத்த கீழ்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன:-

- தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இதே போன்று அனைத்து சங்கங்களையும் இணைத்து ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL கூட்டம் நடத்த வேண்டும். தலமட்டங்களில் கசப்பான உணர்வுகள் ஏதும் இருந்தால் புறந்தள்ளி விட்டு ஒற்றுமையாக இந்தக் கூட்டத்தை நடத்த வேண்டும். கிளை, அலுவலகங்கள் வரை சென்று இந்த இயக்கங்களை வெற்றிகரமாக்கிட திட்டமிட வேண்டும்.
- மாவட்ட மட்டங்களில் நடைபெறும் இயக்கங்களுக்கு மீடியா கவரேஜ்களுக்கான திட்டமிட்ட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.
- மாநில மட்டத்தில் 10,000 சுற்றறிக்கைகளை அச்சிட்டு உடனடியாக மாவட்டங்களுக்கு அனுப்புவது.
- நவம்பர் 20ஆம் தேதிக்கு பின் அனைத்து மாவட்ட தலைநகர்களிலும் அனைத்து மாநில சங்க நிர்வாகிகளும் பங்கேற்கும் சிறப்புக் கூட்டங்களை நடத்துவது.

அனைத்து இயக்கங்களையும் முடிவுகளையும் நாம் சிறப்பாக நிறைவேற்றிடுவோம். நமது ஊதிய மாற்றத்தை உறுதி செய்வதுடன், நம் உயிரினும் மேலான BSNLஐ பாதுகாப்போம்.

வாழ்த்துக்களுடன்

தோழமையுள்ள,

| | | | | |
|---|---|---|---|---|
| **A.பாபு ராதாகிருஷ்ணன்** | **K.நடராஜன்** | **R.ராஜசேகர்** | **C.துரையரசன்** | **C.பலராமன்** |
| **BSNLEU** | **NFTE** | **SNEA** | **AIBSNLEA** | **SEWA BSNL** |

| | | |
|---|---|---|
| **Sd/-** | **sd/-** | |
| **K.கிருஷ்ணன்** | **G.சரவணகுமார்** | **R.அன்பழகன்** |
| **TEPU** | **AIGETOA** | **NFTE STR** |

**தமிழ் மாநில செயலாளர்கள்.**